நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு
வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**
வழக்கு எண். **சிசி. 14 /2022**
வழக்கு சாட்சி- **அ.சா.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | விஸ்வநாதன் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | துரைசாமி | : | தொழில் | விவசாய கூலி வேலை |
| கிராமம் | மணக்கரம்பை | : | சமயம் | |
| தாலுக்கா | திருவையாறு | : | வயது | 51 /2023 |

(எதிரிகள் ஆஜர் )

**<u>நாள் : 04.07.2023</u>**

**முதல் விசாரணை:**

**1)** நான் மணக்கரம்பையில் குடியிருந்து விவசாய கூலி வேலை வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். 2 வது கையெழுத்து பவித்ரன் என்பவருடையது ஆகும். பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.2/அ.சா.2 மற்றும் அ.சா.ஆ.3/அ.சா.2** ஆகும். மேற்படி கையெழுத்தை கடந்த 06.10.2021 ஆம் தேதியன்று மாலை சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது நடுக்காவேரி காவல்நிலையத்தை சேர்ந்தவர்கள் சம்பவ இடத்தை பற்றிய ஒரு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார்கள். அதில் நானும் பவித்ரன் என்பவரும் கையெழுத்து செய்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

அன்றைய தினமே எங்கள் முன்பாக சுமார் 2 அடி நீளமுள்ள விறகு கட்டையை எங்கள் முன்பாக நடுக்காவேரி காவல்நிலையத்தைர சேர்ந்தவர்கள் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்து அவர்களுக்கு சாதகமாகவும், அரசுதரப்பிற்கு எதிராகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம்./-**திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு **)**